TAMIL MURASU, WEDNESDAY, 3 APRIL 2019, PAGE 3

# என்டியு, என்யுஎஸ் முனைவர் படிப்பில் மாணவர் பரிமாற்றத் திட்டம்

முனைவர் கல்வி பயிலும் என்டியு, என்யுஎஸ் பல்கலைக் கழக மாணவர்கள் புதிய மாணவர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் இரு பல்கலைக்கழகங்களின் வகுப்புகளிலும் பங்கேற்கலாம் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்குத் தகுதிபெறும் ஒரு பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் ஜூன் 1 முதல் மற்றொரு பல்கலைக்கழகத்தின் வகுப்புகளுக்குச் செல்லலாம். இரு பல்கலைக்கழகங்களும் அளிக்கக்கூடிய முனைவர் பட்டப்படிப்புக்கான பாடங்களை ஒட்டி ஆழமான, மேம்பட்ட கல்வி அனுபவத்தைப் பெற இது உதவும் என்று இரு பல்கலைக்கழகங்கள் வெளியிட்ட கூட்டு அறிக்கை தெரிவித்தது. முனைவர் பட்டப்படிப்பை மேற்கொண்டு குறைந்தது ஒரு கல்விப் பருவம் முடித்துள்ள முழுநேர மாணவர்கள் இம்மாணவர் பரிமாற்றத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.